தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 10
இதழ் : 9
ஜூலை 2014

## செய்திமலர்



தம்முடைய குமாரனும் நம்முடைய
கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே
ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை
அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.

(1 கொரி. 1 : 9)

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும்
ஆத்தும அறுவடைப்பணியில் ஷாலோம் ஊழியங்கள்
**24** வது ஆண்டில்

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

***கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!***

உங்கள் கரங்களில் ஒவ்வொரு மாதமும் கிடைத்துவரும் இந்த **அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்** ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து உங்களுக்கு அனுப்புகிறோம்.

இந்த தரிசனப்பணியை, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிக்கைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறைகூட காணிக்கை அனுப்பவில்லை.




பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறேன்.

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த ஜூலை மாத இறுதிக்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்குத் தொடர்ந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் ஷாலோம் மிஷனெரிப் பணிகளுக்காக அனுப்பும் காணிக்கைகளுக்காகத் தேவனைத் துதிக்கிறோம், தேவன் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் சந்ததியையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக!

***– பேராயர். வே. தேவதாஸ்***

**“... சுவிசேஷ விஷயத்தில் என்னோடுகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது”.** பிலி. 4:3.

## உங்கள் சகோதரனிடமிருந்து



***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,***

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவகிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான ஆதரவுகளினாலும் பீல் மக்களின் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த 6 மாதங்கள் தேவன் நம்மோடுகூட இருந்து ஆசீர்வதித்து நடத்தி வந்தபடியால் தேவனுக்கு துதி செலுத்தி உங்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறோம்.

**தேவகிருபையால் 24 ஆம் ஆண்டில் பிரவேசிக்கும் ஷாலோம் ஊழியங்கள்**

தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியாகவும், அளவற்ற கிருபையாலும், பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் 1991 ஜுலை 1 ஆம் தேதி ஆரம்பித்த தேவனுடைய தரிசனப் பணியான ஷாலோம் ஊழியப்பாதையில் 23 ஆண்டுகளை முடித்து 01.07.2014 அன்று 24 ஆம் ஆண்டில் பிரவேசிக்க தேவன் கிருபைத் தருகிறபடியால் தேவனைத் துதிப்போம். அழைத்த தேவன் உண்மையுள்ளவர். வாக்குத்தத்தம் பண்ணினவர் மாறாதவர். சகல நாட்களிலும் கூட இருப்பவர். 23 வருடங்கள் பீல் மக்கள் மத்தியில் அற்புத ஊழியங்களை ஆவியினால் நடப்பித்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சபைகள் கட்டப்பட்டு வருகிறபடியால் தேவனுக்கே மகிமையை செலுத்துவோம். தேவன் தந்த பல்லாயிர பீல் ஆதிவாசி குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம். ஷாலோம் மிஷனெரி தரிசனப் பணிகளை எங்களுடன் இணைந்து கடந்த 23 ஆண்டுகளாக ஜெபித்து, தாங்கி தேவனுடைய ராஜ்ஜியத்தை பீல் மக்களின் மத்தியில் கட்ட முன்வந்த உடன் பங்காளர்களாகிய உங்களை எங்கள் அன்பு குடும்பத்தினராகப் பாவித்து நன்றி கூறி தேவனுக்கே மகிமையைச் செலுத்துவோம்.

**23 வது வருட துதி ஸ்தோத்திர சுதேச ஊழியர் கூடுகை**

கர்த்தருக்குச் சித்தமானால் ஜுலை 1 ஆம் தேதி நம் ஷாலோம் ஊழிய நாளன்று இராஜஸ்தானில் கோய்க்கா கிராமத்தில் தேவநாம மகிமைக்கென்று கட்டப்பட்டுள்ள ஷாலோம் பேராலயம் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. அது ஷாலோம் பேராலயமாகவும், அந்த வட்டாரத்தில் உள்ள 100 சபைகளுக்குத் தேவையான அனைத்துப் பயிற்சி மற்றும் முகாம்கள் நடத்தப்பட ஒரு ஆவிக்குரிய மையமாக விளங்கும். அதை ஜெபித்து திறந்து வைக்கும் வைபவத்திற்கு அன்புக்குரிய **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள், **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** மற்றும் அவர்களின் மூத்த மகள் **லாவண்யா ஜோசப்** அவர்கள் குடும்பம் மற்றும் இளைய மகள் **சுகன்யா ஜோசப்** அவர்களும் பங்கு பெறவுள்ளார்கள். அதைத் தொடர்ந்து கிராம ஆலயப் பிரதிஷ்டைகள், மூன்று மாநில சுதேச ஊழியர்களின் 23 வது வருட துதி ஆராதனை மற்றும் சிறப்புக் கூடுகை ஜுலை 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த கூடுகைகளின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

## 25 வது வருட நிறைவு ஆயத்தங்கள்

தேவன் தந்த தரிசனப் பணியை நாங்கள் எங்கள் குடும்பமாக மட்டுமல்ல, தேவன் தந்த பீல் சுதேச ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகளுடன் இணைந்து 2016 ஜுலை மாதத்திற்குள் அதாவது 25 ஆம் ஆண்டுகள் நிறைவின்போது 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 கிராம சபைகள், 500 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட குறைந்தது 1 இலட்சம் குடும்பங்களை தேவனண்டை நடத்த ஜெபத்துடன் திட்டமிட்டு செயல்பட அர்ப்பணித்துள்ளோம். கிட்டத்தட்ட 23 வருடப் பணிகளை 2 வருடத்தில் நிறைவேற்ற, இருமடங்காக செயல்பட ஆவியானவரால் ஏவப்பட்டுள்ளோம்.

நீங்களும் இருமடங்காக ஜெபித்துத் தாங்கவும், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற புதிய ஆதரவாளர்கள் குடும்பங்கள், சபைகள், ஜெபகுழுக்களில் அறிமுகப்படுத்த அன்புடன் கேட்கிறேன். இத்திட்டத்தை நிறைவேற்ற மாதந்தோறும் ரூ. 1000, ரூ. 500 கொடுக்கக்கூடிய குறைந்தது 2000 ஆதரவாளர்களும், ரூ. 2000 மாதந்தோறும் ஜெபித்துத் தாங்கும் மிஷனெரி ஆதரவாளர்களும், ரூ.600 மாதந்தோறும் ஜெபித்து 1000 பீல் ஆதிவாசி மாணவர்களை தாங்கும் ஆதரவாளர்களும் மற்றும் இந்த வருடத்தில் 100 கிராம ஆலயக் கட்டுமான நிதியாளர்களும் (ரூ. 2 இலட்ச மதிப்பில்) 25 ஆம் ஆண்டு இறுதிக்குள் 250 எழுப்பப்பட ஜெபியுங்கள்.

## 23 ஆம் வருட நிறைவு சிறப்பு மலர்

அதிகமான ஊழியங்களின் நிமித்தமாகவும், ஜுலை மாதத்தில் 23 வருட சிறப்பு மலர் வெளியிட முடியவில்லை என்பதை தயவாகத் தெரிவிக்கிறோம். ஆனால் மிகவும் நேர்த்தியாக தேவநாம மகிமைப்பட அடுத்த ஆகஸ்ட் மாத மலரை 23 ஆம் வருட நிறைவு சிறப்பு மலராக 25 ஆவது வெள்ளிவிழா சிறப்புத் திட்டங்களுடன் முழு வண்ணமாக வெளியிட இருக்கிறோம். ஜெபத்தோடு நீங்கள் வாசித்து தேவனை மகிமைப்படுத்தி மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்த, கொடுக்க அன்புடன் கேட்கிறேன்.

## அன்பு பகிர்வு இயக்க செய்தி மலர்

இந்த செய்தி மலர் மாதந்தோறும் உங்கள் கைகளில் கிடைக்க தேவன் செய்த கிருபைக்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன். ஆத்துமப் பாரத்துடனும் ஜெபத்துடனும் பணம் செலவு செய்து அனுப்புகிறபடியால் இதை வாசிக்கும் நீங்கள் வருடத்திற்கு ஒரு முறையாவது காணிக்கை ஷாலோம் மிஷனெரி ஊழியத்திற்கு அனுப்ப அன்புடன் கேட்கிறேன். தயவாக இந்த மாதம் உங்களால் முடிந்த காணிக்கையை கட்டாயமாக அனுப்பி ஆகஸ்ட் மாத 23 வருட சிறப்பு மலரை பெற்று ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள அன்புடன் வேண்டுகிறேன். வருடம் ஒரு முறை கூட ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பாதவர்களுக்கு இந்த மலரை அனுப்ப இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதிவாசி மாணவர்கள் கல்வியறிவுத் திட்டம்

ஜுன் மாதத்தில் மூன்று மாநிலங்களிலுள்ள நம் ஆதிவாசி மாணவர்கள் 10, +2 மற்றும் கல்லூரிப் படிப்பைப் படித்து வருகிறார்கள். நாம் தாங்கி வரும் சுமார் 200 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்கள் உயர்கல்வி படித்து நம் மூலம் தாங்கப்பட்டு வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள். இவர்கள் மட்டுமன்றி

தாங்கப்பட்டு வரும் மற்ற 1000 ஆதிவாசி மாணவர்களுக்காக ஜெபியுங்கள். ஆதிவாசி மாணவர்களின் கல்விப்பணிக்காக குறைந்தது இவ்வருடத்தில் ரூ.40 இலட்சங்கள் தேவைப்படுகிறது. தேவன் உங்களுக்குத் தந்த பிள்ளைகளுக்காக எவ்வளவோ பணம் செலவழிக்கும் போது ஒரு பீல் ஆதிவாசி மாணவனுக்கு உங்களால் முடிந்த உதவியைச் செய்ய அன்புடன் கேட்கிறேன்.

**ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்**

- ❖ பீல் மக்கள் தரிசனப் பணியை நிறைவேற்ற அடியேனுக்கு (பேராயர். தேவதாஸ்) தேவன் நல்ல சுகத்தையும் பெலனையும் தந்து தேவ ஞானத்தையும் தரும்படியாக ஜெபியுங்கள்.
- ❖ அடியேனுடைய குடும்பத்திற்காக, விசேஷமாக என் மனைவி **வஹிதா தேவதாஸ்** பணித்தளத்தில் பொறுப்பேற்று நடத்தும் அனைத்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- ❖ மூத்த மகன் டைட்டஸ் மெர்லின் குடும்பத்திற்காகவும் மற்றும் மகள் மெர்லினுக்கு தேவன் சுக பிரசவத்தைக் கட்டளையிடவும், தலைமைத்துவப் பயிற்சிப் பெற்று ஊழியத்தில் தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்
- ❖ Media படிப்பை முடித்து பணித்தளத்திற்கு வந்துள்ள இரண்டாவது மகன் ஷாலோமை தேவன் பயன்படுத்தவும், பணித்தளத்தில் Audio Video ரிக்கார்டிங் அறைகள் கட்டப்பட்டு அனைத்து பீலி, பிலோடி, குஜராத்தி, வாகுடி, ஹிந்தி பாடல் செய்திகள் வெளியிடப்படவும் அதற்கான உபகரணங்கள் கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்.
- ❖ விஷேசமாக அன்பு மகள் ஜாய் ஷெக்கினா ரஷ்யாவில் 4 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பை முடித்து ஜூலை மாதம் முதல் வாரம் தமிழகம் வருகிறாள். தூத்துக்குடியில் AVM மருத்துவமனையில் ஒரு மாத சிறப்புப் பயிற்சிப் பெறவும், அதன் பின்பு குஜராத்தில் எங்களுடன் 2 வாரங்கள் ஊழியத்தில இணைந்து செயல்படவும் வருகிறாள். அவளுக்காகவும் ஜெபியுங்கள்.

குறிப்பாக 08.07.2014 அன்று திருமணநாளைக் காண தேவன் கிருபைச் செய்திருக்கிறார். தேவகிருபையால் 29 வருட இல்லற வாழ்வை முடித்து 30 ஆம் வருடத்தில் அடியெடுத்து வைக்கிறோம். தேவன்தாமே எங்கள் குடும்பத்தை ஆசீர்வதிக்கவும் பீல் மக்களுக்கு மட்டுமல்ல, பாரத தேசத்திற்கும் நாங்கள் ஆசீர்வாதமாக விளங்கவும் ஜெபியுங்கள். உங்கள் யாவருக்காகவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம்.

**“உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக”** (ரூத் 2: 12) என்ற வசனத்தின்படி தேவன்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# உங்களை அழைத்த தேவன்



சிறப்புச் செய்தி : பேராயர். V. தேவதாஸ்

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, நாம் கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள், பாவமன்னிப்புப் பெற்று இரட்சிக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குச் சாட்சியாக அழைக்கப்பட்டவர்கள், கிறிஸ்துவின் வருகையில் பங்கெடுத்து நித்திய ஜீவனைப் பெற்றுப் பரலோக வாசிகளாக ஜீவிக்க அழைக்கப்பட்டவர்கள். 1 கொரி. 1:9 இல் சொல்லப்பட்டப்படி இவ்வுலகத்தில் நாம் கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட தேவன் நம்மை அழைத்துள்ளார். அழைத்த தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

1 பேதுரு 2 : 9 ஐ வாசித்துப் பாருங்கள். தேவன் நம்மை எதற்காக அழைத்தார்? எப்படியாக அழைத்திருக்கிறார் என்பதைக் காணலாம். **"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."** (1 பேதுரு 2:9)

**1. அவருக்குச் சொந்தமான ஜனமாக அழைத்த தேவன்**

தேவன் நம்மை அவருக்குச் சொந்தமான ஜனமாக நாம் இருக்கும்படியாகத் தெரிந்துக் கொண்டார். இது எவ்வளவு பெரிய சிலாக்கியம் பாருங்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் ஆபிரகாமைத் தமக்காகத் தெரிந்துக் கொண்டு அவன் சந்ததியான இஸ்ரவேலை **"என்னுடைய ஜனம்"** என அழைத்தார். **"இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்"** (எண்.24:1) என அன்பை வெளிப்படுத்தினார். ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசு மூலமாக நமக்கும் கிடைக்கப் பெற்றுள்ளது (கலாத்தியர் 3:14).

நம் பாவங்கள், சாபங்கள், நோய்களை எல்லாம் சிலுவையில் சுமந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நம்மை மீட்டு தேவன் தமக்கு சொந்த ஜனமாக அழைத்துள்ளார். நாம் அப்பா பிதாவே என்று அழைக்கும்படியான புத்திரசுவிகாரப் பாக்கியத்தைத் தந்து தம்முடைய சொந்த ஜனமாக தெரிந்துக் கொண்டார். **"கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது"** (சங்கீதம் 144:15). எத்தனையோ கோடி, இலட்சக்கணக்கான ஜனங்கள் தேவனை அறியாமல் நம்மைச் சுற்றி வாழ்ந்துக் கொண்டிருக்கும்போது நம்மை அவருக்குச் சொந்தமான ஜனமாக அழைத்த தேவனைத் துதிப்போம்.

**பரிசுத்த ஜாதியாக அழைத்த தேவன்**

**"தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்".** (1 தெச. 4:7) **"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்."** (1 பேதுரு. 1 : 15)

நான் பரிசுத்தர் என்று திருவுளம் பற்றின தேவன், "சேனைகளின் தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஓயாமல் பாடித் துதித்து ஆராதிக்கும் தேவதூதர்கள் மத்தியில் அவர் வாசம் பண்ணுகிற தேவனாக இருக்கிறார். நாமோ பாவத்திலும், அக்கிரமத்தினால் மரித்த நம்மை அவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மீட்டுக்கொண்டார். 1 பேதுரு 1:19 ஐ வாசித்துப் பாருங்கள், **"குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே"**

நம் பீல் மக்களைப் பாருங்கள், நாங்கள் 29 வருடங்களுக்கு முன்பு திருமணமாகி 40 நாட்களில் பீல் மக்கள் பிராந்தியத்தில் தேவனுடையத் தரிசனத்தை, அழைப்பைப் பெற்று இன்றும் ஊழியங்களை நிறைவேற்றுகிறோம். அந்த நாட்களில் முதன்முறையாக எங்களை ஜெபத்திற்காக தேடி வரும் பீல் மக்கள் பயங்கரமான குடியிலும், கொள்ளையடிப்பதிலும், வேசித்தனத்திலும், சண்டையிட்டுக் கொண்டு கொலைவெறி கொண்டவர்களாகவும், அசுத்த ஆவியின் கட்டுகளிலும், மந்திரவாதிகளின் பிடிகளிலும் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் பெயரை முதன்முதலாகக் கேள்விப்பட்டு, ஏற்றுக்கொண்டு, அற்புத அடையாளங்கள் மூலமாக விடுதலைப் பெற்றார்கள். பரிசுத்தத்தைப் பற்றி அதிகமான போதனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே எல்லா பாவங்களையும் அறிக்கைச் செய்து விட்டுவிட்டு அற்புதமான விடுதலையைப் பெற்று, பரிசுத்தமாக, இயேசு கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்பட்டு பரிசுத்த ஜாதியாக வாழ்ந்து வருகிறார்கள். நம்மை பரிசுத்த ஜாதியாக அழைத்த தேவனைத் துதிப்போம்.

### 3. ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்

நம்மை தேவன் தமக்கு ஆராதனைச் செய்யும் ஆசாரியர் கூட்டமாகத் தெரிந்தெடுத்துள்ளார். **"இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்"** ஏசாயா 43:21 என்ற வசனத்தின்படி அவரைத் துதித்து ஆராதிக்கும்படியாகத் தெரிந்துக் கொண்டார். பீல் மக்கள் அங்குள்ள கலாச்சாரத்தின்படி குடித்துவிட்டு பாடல்பாடி, நடனமாடுவார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பு தேவனுடைய மகிமையை உயர்த்தி பல மணி நேரம் ஆடிப்பாடி துதிக்கிறார்கள், கல்வியறிவும், உலக ஞானமற்ற அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுகிறார்கள், ஆராதனையின் இறுதியில் இயேசுவின் அன்பினை நினைத்துக் கண்ணீருடன் தங்களை அர்ப்பணிக்கிறார்கள், திருவிருந்து பெறும் வேளையில் அப்பத்தையும், ரசத்தையும் பெற்றுக் கொள்ளும்போது கல்வாரி அன்பினால் நிரப்பப்படும் காட்சியைக் காணும் போது பரலோகப் பிரசன்னத்தை அனுபவிக்கிறார்கள். நம்முடைய தேவன் நம்மை ஆசாரியக்கூட்டமாக அழைத்துள்ளார்.

மட்டுமல்ல, ராஜரீகமான ஜனமாக அதாவது உலகத்தில் தாம் தெரிந்து கொண்ட ஜனத்தை ஆசீர்வதிக்கப்பட்ட ஜனமாக அழைத்துள்ளார். **"நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார்"** (உபாகமம் 26:19)

இவ்வுலக ஆசீர்வாதங்களை மட்டுமல்ல **"ராஜரீகம்"** என்று சொல்லும்போது அதிகாரங்களையும் தேவ ஜனத்திற்கு அவர் கொடுக்கிறார். சத்துருவின் சகலப் போராட்டங்கள், அந்தகார லோகாதிபதிகள், அதிகாரங்களுக்கு விரோதமான போராட்டங்கள் அனைத்திலும் வெற்றியை சுதந்தரிக்கும் ராஜரீக அதிகாரம் தந்துள்ளார். **"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"** என்று கூறிய இயேசு நமக்கும் அதிகாரங்களை பரிசுத்த ஆவியானவரின் மூலமாகத் தந்துள்ளார். பெலன் கொண்டு ராஜரீகக் கூட்டமாக வாழும்படியாக அழைத்த தேவனைத் துதிப்போம்.

**4. அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாக அழைத்த தேவன்**

தேவனுடைய சொந்த ஜனமாக, பரிசுத்த ஜாதியாக, ராஜரீக ஆசாரியக் கூட்டமாக எதற்காக அழைத்துத் தெரிந்துக்கொண்டார். அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படியாகத் தெரிந்துக்கொண்டார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசிகளையும் தேவன் நற்செய்தியை, கல்வாரி அன்பினை அறிவிக்கும்படியாகத் தெரிந்துக் கொண்டார். தேவகிருபையால் சுமார் 25,000 பீல் ஆதிவாசிக் குடும்பங்கள் இயேசுவை அறிந்து கொள்ளும்படியாக தேவன் கிருபைத் தந்துள்ளார். நாங்கள் பீல் விசுவாசிகளிடத்தில் ஷாலோம் ஊழியத்தில் 24,25 ஆம் (இரண்டு) வருடத்திற்குள் குறைந்தது 1 இலட்ச குடும்பங்களைத் தேவனண்டை நடத்த வேண்டும் என அழைப்புக் கொடுத்த போது பீல் சுதேச ஊழியர்கள் ஒவ்வொரு விசுவாசி குடும்பங்களை ஜெபிக்க, ஆத்தும ஆதாயம் செய்யப் பாரம் கொடுத்து அவருடைய புண்ணியங்களை (கல்வாரியின் நற்செய்தியை) அறிவித்து குறைந்தது 4 குடும்பங்களை சபைகளுக்குக் கொண்டு வர ஜெபிப்போம், உழைப்போம், அவர் ராஜ்ஜியத்தைக் கட்டுவோம் என அர்ப்பணித்தார்கள். நாமும் கூட நம் வாழ்வில் நம்மை மீட்ட இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களை அறிவித்து அவர் நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

**5. கிறிஸ்து இயேசுவுக்குள் ஐக்கியமாவதற்கு நம்மை அழைத்த தேவன்**

கடைசியாக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை ஐக்கியமாக்குவதற்கு நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். **"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகலநாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"** (மத்தேயு 28:20) என்ற அருள்நாதர் இயேசு நம்முடன் இருக்கிறார். **"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்"** (ஏசாயா 41:10) என்ற பிதாவானவரின் வாக்குறுதிகளை நினைவு கூருவோம். என்றென்றைக்கும் நம்மோடு வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவருக்காக (யோவான் 14:16) தேவனைத் துதிப்போம். திரியேக தேவன்தாமே நம்மோடுகூட இருந்து நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவார். **"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்"** (1 தெச.5:24) என்ற வசனத்தின்படி தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

# சுதேச ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விப் பணிக்காக உதவுவோம்

*தேவகிருபையால் நம் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக 500 க்கும் அதிகமாக எழுப்பப்பட்ட பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக 600 க்கும் அதிகமான சபைகளையும், ஆயிரக்கணக்கான விசுவாச குடும்பங்களையும் தேவன் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

*தேவன் நமக்குத் தந்த சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 1500 பேர்களில் 1050 பேர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இவர்கள் சொந்தக் கிராமங்கள் மிகவும் பின் தங்கிய கிராமங்கள். பல மாணவர்கள் அருகில் உள்ள பள்ளிகளிலும், உயர்கல்விக்காக தொலைவில் உள்ள பள்ளிக்கூடங்களிலும் படித்து வருகிறார்கள். சுமார் 200 பிள்ளைகள் விடுதிகள் உள்ள பள்ளிகளில் படித்து வருகிறார்கள். சுமார் 100 பிள்ளைகள் ஆங்கில வழி பள்ளிகளிலும் படித்து வருகிறார்கள்.*

*இவர்களில் பெரும்பாலானோர் நம் ஷாலோம் மூலம் மாத ஆதரவு பெற்று தாங்கப்பட்டு வந்தாலும் ஜுன் மாதத்தில் சீருடை, பள்ளிக்கட்டணம், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பேக் போன்ற தேவையான உபகரணங்கள் வாங்க நிதி உதவி தேவைப்படுகிறது. ஆகவே குறைந்தது ரூ.1000 வீதம் ஒவ்வொரு ஊழியர்களின் 1050 பிள்ளைகளுக்கும் ஜுன் மாதம் உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.*

**இதை வாசிக்கும் அன்பானவர்களே, உங்களால் முடிந்த அளவு பிள்ளைகளுக்கு ரூ. 1000 வீதம் உதவி செய்து தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். இதற்கேற்றபலனை தேவன் பலமடங்கு உங்கள் சந்ததிக்கு கட்டளையிடுவாராக. நீங்கள் காணிக்கை அனுப்பும்போது சுதேச ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விப் பணிக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**



**கிறிஸ்துவின் சாட்சிகளாகவும், திருச்சபைக்குத் தூண்களாகவும் தேசத்திற்கு ஆசீர்வாதமாகவும் உருவாகி வரும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களின் மேற்படிப்பிற்காக கரம் கொடுப்போம் வாருங்கள்!**



பெயர்
**மகேஷ் கோர்சிங் டாமோர்**
கிராமம் :
புரக்குவா, குஜராத்




பெயர்
**புஷ்பா மங்கள்சிங் வஹோனியா**
கிராமம் :
நன்டலாவ், குஜராத்



பெயர்
**ஹன்சா மங்கு புரியா**
கிராமம் :
பாட்டன்புரா, குஜராத்



பெயர்
**இம்மானுவேல் மசூர் கனாவா**
கிராமம் :
கோலானா, குஜராத்



பெயர்
**தீபிகா மோகன்**
கிராமம் :
வாங்கோல், குஜராத்



பெயர்
**மெர்சி சாம்சன்**
கிராமம் :
வங்கோல், குஜராத்



பெயர்
**கிருபா W. சங்காடா**
கிராமம் :
சாப்ரி, குஜராத்



பெயர்
**டேனியல் கன்னு பாபோர்**
கிராமம் :
மல்வாசி, குஜராத்



பெயர்
**அஸ்மிதா வீர்சிங் பாபோர்**
கிராமம் :
கோலானா, குஜராத்



பெயர்
**திலிப் அமர்சிங் வாசுனியா**
கிராமம் :
ஹத்தியாதள்ளி, ம.பி.



பெயர்
**நரேஷ் நாரு டாமோர்**
கிராமம் :
தேத்லா, ம.பி.



பெயர்
**அனில் ஈஸ்வர்லால் டின்டோர்**
கிராமம் :
பர்னாலா, இராஜ்



பெயர்
**ஈஸ்வர்லால் ஹர்தா ஹடா**
கிராமம் :
ஹரேந்திரகட், இராஜ்



பெயர்
**மால்சிங் கல்லா**
கிராமம் :
அம்பாபாடா, இராஜ்



பெயர்
**சாந்தி கல்லா**
கிராமம் :
போர்பாடோட், இராஜ்



பெயர்
**நிலேஷ் நான்கு**
கிராமம் :
ஹரேந்திரகட், இராஜ்



பெயர்
**முகேஷ் பிரபுலால் பாபோர்**
கிராமம் :
தாத்கா, இராஜ்.



பெயர்
**ஜுவான்சிங் ராவ்ஜி பாரியா**
கிராமம் :
ஹரேந்திரகட், இராஜ்



பெயர்
**சுரேஷ் சந்திர தாமா**
கிராமம் :
தாமாசாத், இராஜ்



பெயர்
**ஆராதனா ஜெகதீஷ்**
கிராமம் :
பில்குவா, இராஜ்.



## வாருங்கள்! பீல் ஆதிவாசி மாணவர்களை **உயர் கல்விப்பணியில்** தாங்குவோம்!

## கிறிஸ்துவுக்காக புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்!

தேவ கிருபையால் அவர் தந்த தரிசனப்படி பீல் மக்களின் மத்தியில் 3 மாநிலங்களிலும் சுமார் 20,000 குடும்பங்களுக்கு மேலாக இயேசுவை ஏற்றுக்கொண்டு புதுவாழ்வு பெற்ற இவர்கள் சந்ததியைக் குறித்து மிகவும் பாரமுண்டு.

பீல் ஆதிவாசி மக்களுக்கு சில கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கூட வெகு தொலைவில்தான் உண்டு. 5 ஆம் வகுப்பிற்கு மேல் படிப்பதற்கு இன்னும் பல கி.மீ தூரம் நடந்து சென்றாலும் தரமான கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிகள், ஆசிரியர்கள் கூட கிடையாது. மேலும் +1 மற்றும் +2 படிப்பதற்கு ஒரு தாலுகாவிற்கு சில பள்ளிகள் மட்டுமே உண்டு. போக்குவரத்து வசதியும் வீட்டில் படிப்பதற்கு சூழ்நிலையும், போதிய பண வசதியும் இல்லாமல் உயர் கல்விக்குப் போவது மிகக் கடினம். கல்லூரி மற்றும் பிற வேலை வாய்ப்பிற்காக படிப்பதை எண்ணிக் கூடப் பார்க்க முடியாது. அப்படியே படித்தாலும் பணத் தேவைகளுக்காக மாதம் 10% வட்டி கட்டும்படியாக கடன் வாங்கி வேதனைப்படுவார்கள்.

தேவ கிருபையால் நாம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் சுமார் 1050 பிள்ளைகளைப் படிக்க வைத்து வருகிறோம். மாதம் ரூ. 600/– ஜெபித்துத் தரும் ஆதரவாளர்களின் உதவித் தொகை மூலமாக இவர்களை 9 ஆம் வகுப்பு வரை தாங்கிவிடலாம். ஆனால் 10,11,12 மற்றும் கல்லூரிப் படிப்பிற்காக, வீட்டைவிட்டு நகரத்துக்கு வந்து, தனி அறை எடுத்து, சமைத்து உண்டு படிக்க முடிவதில்லை. மாணவர்களுக்கு விடுதி வசதிகள் குறைவு. நம் ஷாலோம் மாணவர்கள் டியூசன் படித்து நல்ல மதிப்பெண்களைப் பெற வாஞ்சிக்கிறார்கள். நல்ல மதிப்பெண்கள் பெற்றவர்கள் Nurse, Teacher, Computer Course இப்படிப்பட்ட படிப்பிற்கு செல்ல ஆயத்தமாகிறார்கள். மேலும் சில சுதேச ஊழியரின் பிள்ளைகளில் மிக ஞானமுள்ளவர்கள் ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ந்து நன்கு படிக்கிறார்கள். **இவர்களுக்கு 3 அல்லது 4 வருடங்களுக்கு படிப்பிற்கு ஏற்றபடி கூடுதலான செலவுகளாக ரூ. 10,000/–, ரூ. 20,000/–, ரூ. 30,000/– என நிதி உதவியை சுமார் 200 மாணவர்களுக்கு நாம் செய்ய வேண்டும்.**

இவர்கள் படித்து முடித்து நல்ல வேலைக்கு வந்த பின்பு குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் குடும்பம் மற்றும் சபையின் சார்பில் ஒரு ஆதிவாசி மாணவனை ஜெபித்து தாங்கி ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

மேற்கண்ட கல்விப் பணிக்காக காணிக்கைகளை அனுப்பும்போது **SHALOM CHARITY MISSION** என்ற பெயரில் D.D. or. Cheque அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களது வங்கிக் கணக்குகளிலும் நீங்கள் நேரடியாக காணிக்கைகளை செலதத்தலாம்.

வெங்கிக் கணக்கு
**SHALOM CHARITY MISSION**
**Axis : 105010100096779**
**TMB : 174100710400061**

குறிப்பு : நீங்கள் **Shalom Charity Mission** க்கு செலுத்தும் காணிக்கைகளுக்கு **80G** வரி விலக்கு உண்டு

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ஷெக்கினா M. கராசியா** |
| தந்தையின் பெயர் | : | மான்சிங் கராசியா |
| தாயாரின் பெயர் | : | சம்பா கராசியா |
| பிறந்த நாள் | : | 05.04.2003 |
| படிக்கும் வகுப்பு | : | 6 th Std. |
| சொந்த ஊர் | : | கதேடியா |
| மாவட்டம் & மாநிலம் | : | பான்ஸ்வாடா, இராஜஸ்தான் |

மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–

இவளுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி, தம்பாக்கு போன்றபாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருடைய மகள் 6 வயதிருக்கும் போது, பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டாள். மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் ஒரு பலனுமில்லை. பின்பு ஷாலோம் ஊழியர் பதியா கராசியாவைக் குறித்து கேள்விப்பட்டு கும்புரா கிராம சபைக்கு அவரது மகளை அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்த போது, தேவன் அவளுக்கு பிசாசின் பிடியி–ருந்து விடுதலை கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் முழுக் குடும்பமும் இயேசுவை ஏற்றுக் கொண்டு, ஊழியத்திற்கு அர்ப்பணித்து, தனது சொந்த கிராமத்தில் ஊழியத்தை ஆரம்பித்தார். தற்போது இவர் மூலமாக கதேடியா கிராம சபையில் 80 குடும்பத்தாரும், நானிசென்டு கிராம சபையில் 35 குடும்பத்தாரும் தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

மாணவியைக் குறித்து :– ஷெக்கினா நன்றாகப் படிப்பாள். கபடி விளையாடுவது பிடிக்கும். இவளுக்கு 2 சகோதரர்களும், 1 சகோதரியும் உண்டு.

ஜெபியுங்கள் :– இவளுக்காக படிப்பு, நல்ல சரீர சுகம் பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Ms. Anita Christabel**, Hyderabad.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் 252 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 620 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 262 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. **தேவனுக்கே மகிமை!**

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 1 இலட்சம், 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில

## 2014 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)

✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை

தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.

☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.

☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

---

**ரூ. 2 இலட்சங்கள் மற்றும் ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியன அனுப்பி வைக்கப்படும். மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

---

**நிதி உதவி அனுப்பும் போது *Sharing Love Mission* என்ற பெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009** (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373** (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799** (IFS Code : ICIC0006139) |

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**புதிய கல்வியாண்டிற்குள் நுழையும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக**

✞ இந்த வருடத்தில் புதிய கல்வியாண்டிற்குள் நுழையவிருக்கும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களை தேவன் ஆசீர்வதித்து நல்ல சுகம் பெலன் தந்து ஞானத்தால் நிரப்பவும், இவர்களது கல்வி தேவையினை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

✞ மேற்படிப்பிற்காக காத்திருக்கும் மாணவ மாணவிகளுக்கு தேவன் நல்ல மதிப்பெண்களைத் தந்து அவர்களது வாஞ்சையின்படி மேற்படிப்பிற்கு இடங்கள் கிடைக்கவும், இவர்களுக்காக தேவன் சிறப்பு ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் அதன் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ **www.shalommission.in** என்ற இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

# நாட்டு நடப்புச் செய்திகள்

கடந்த ஜுன் மாதம் 16 ஆம் தேதி இந்தியாவின் 15 ஆவது பிரதமராக நரேந்திர மோடி அவர்கள் பதவியேற்றார்கள். அவருடன் 44 அமைச்சர்களும் பொறுப்பேற்றுள்ளனர். இந்திய குடியரசுத் தலைவர் மாளிகையின் வெளிமுற்றத்தில் நடைபெற்ற விழாவில், நரேந்திர மோடி அவர்களுக்கும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

---

கடந்த மாதம் முதல் மும்பை மாநகரில் மெட்ரோ ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாலை வழியாகச் செல்லும்போது 40 நிமிடங்கள் முதல் ஒன்றரை மணி நேரம் வரை எடுக்கக்கூடிய தூரத்தினை இனி 20 நிமிடங்களில் கடக்க முடியும். நான்கு நிமிடங்களுக்கு ஒரு ரயில் என இச்சேவை முதலாவதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்கு பெட்டிகள் கொண்ட ஒரு ரயிலில் 1500 பேர் வரை பயணிக்க முடியும்.

---

சூரிய சக்தியில் இயங்கும் விமானம் ஒன்று பரிசோதனை வெள்ளோட்டமாக சுவிட்சர்லாந்தில் முதல் முறையாகப் பறக்கவிடப்பட்டுள்ளது. சென்ற வருடம் அமெரிக்காவின் குறுக்காக பறந்த சோலார் இம்பல்ஸ் 1 என்ற விமானத்தின் பெரிய மற்றும் மேம்பட்ட வடிவம் தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த சோலார் இம்பல்ஸ் 2 விமானமாகும். மனிதர்களை சுமந்துகொண்டு நெடுந்தூரம் பறந்த சூரிய சக்தி விமானமாக 26 மணி நேரம் இந்த விமானம் பறந்துள்ளது.

---

கடந்த மே மாதம் 20 ஆம் தேதி இரவு வங்கக் கடலில் ஏற்பட்ட நில அதிர்வு இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் உணரப்பட்டது. ரிக்டர் அளவுகோளில் 5.8 ஆகப் பதிவான இந்த நில நடுக்கத்தின் தாக்கம், தில்லி, ஒரிசா, மேற்கு வங்கம், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் உணரப்பட்டன. சென்னையின் சில பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது. ஆயினும் இந்த நில அதிர்வால் யாருக்கும் காயங்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை.

நன்றி : www.bbc.co.uk/tamil

**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**


<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

### சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். மசூர் கணாவா

### கொலானா, குஜராத்



இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் **மசூர் கணாவா.** நான் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ள கொலானா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எனது தாத்தா அக்காலத்தில் அயர்லாந்து மிஷனெரிகள் மூலம் இயேசுவை அறிந்தவர். மேலும் எங்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தக்கூடியவர்கள் இல்லாத காரணத்தால் மறுபடியும் பாவ வாழ்க்கையில் ஈடுபட்டு, மந்திரவாதிகளை நம்பி, பின் மாற்றம் அடைந்த கிறிஸ்தவர்கள். நானும் இயேசுவை அறியாமல் பிறரிடம் சண்டை போடுவது போன்ற பாவமான வாழ்க்கை வாழ்ந்தேன். என்னுடைய குடும்பத்தில் பாவம், சாபம், வியாதி போன்றவற்றினால் மிகவும் கஷ்டப்பட்டோம்.

எனது சகோதரனுக்கு குழந்தையில்லாத காரணத்தால் எத்தனையோ மந்திரம் செய்தும், பலனில்லாமல் இறுதியில் பிப்லியா என்ற கிராமத்தில் **பேராயர். தேவதாஸ்** மற்றும் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் நடத்தின கிறிஸ்தவக் கூட்டத்தில் பங்கு பெற்றோம். அங்கு எனது சகோதரனுக்காக ஜெபித்த போது அதே மாதத்தில் தேவன் குழந்தைப் பாக்கியத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் நாங்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டோம். அதன் பின் எனது **சகோதரர் சம்மு பாய்** வீட்டில் ஜெபக்கூட்டம் நடபெற்றது.

ஆனாலும் திரும்பவும் பாவத்தில் விழுந்ததின் காரணமாக T.B வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். 11 நாட்கள் மருத்துவமனையில் படுக்கையிலிருந்தேன். மருத்துவர்கள் என்னைக் கை விடப்பட்ட நிலையில் எனது படுக்கையில் நான் அழுது இயேசுவை நோக்கி நீர் எனக்கு சுகம் தருவீரானால் நான் உமக்காக ஊழியம் செய்வேன் என்று ஜெபித்தேன். அந்த ஜெபத்தைக் கேட்டு தேவன் எனக்கு சுகத்தைக் கொடுத்தார். பின்பு 15–09–1999 அன்று பாரேவா கிராமத்தில் நடைபெற்ற ஷாலோம் மூப்பர்கள் கூடுகையில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் என் பின்னே வா என்ற தலைப்பில் கொடுத்த செய்தி என்னைத் தொட்டது. அன்று தேவன் என்னோடு பேசவே நான் ஊழியத்திற்கென்று என்னை அர்ப்பணித்தேன். பின்பு 01–10–1999 இல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்தேன். India Campus Crusade For Christ இல் Film Team பயிற்சிப் பெற்று ஷாலோம் ஊழியத்தின் மூலம் 2 வருடங்கள் கிராமம் கிராமமாக இயேசுவின் வாழ்க்கை வரலாறு திரைப்பட ஊழியத்தைச் செய்தேன். பின்பு B.Th முடித்து, எனது கிராமமான கொலானாவில் சபையை நிறுவி, அதின் போதகராக இருந்து ஊழியம் செய்து வருகிறேன். தற்போது இந்த ஆலயத்தில் 80 க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர்.

**இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : Medess Prayer Team, Nazareth.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள்.

# தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்!



ஷாலோம் ஊழியங்களின் மூலம் பீல் மக்களின் மத்தியில் நடைபெற்று வரும் மிஷனெரிப் பணியில் **23 ஆண்டுகளை நிறைவு செய்து 24 ஆம் ஆண்டிற்குள்** அடியெடுத்து வைக்க தேவன் கொடுத்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெற்றுவரும் ஷாலோம் ஊழியங்களை நேசித்து தாங்கி வரும் ஜெப ஆதரவாளர்கள் மற்றும் மிஷனெரிப் பணிகளை பல வகைகளில் தாங்கிவரும் ஷாலோம் ஆதரவாளர்கள், ஷாலோம் பிரதிநிதிகள், Sharing Love Mission & Shalom Charity Mission செயற்குழு உறுப்பினர்கள் ஷாலோம் முன்னேற்றப் பணியாளர்கள், குஜராத், பணித்தள அலுவலகம், தூத்துக்குடி தலைமை அவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதித்துக்கிறோம். உங்கள் யாவருக்கும் இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகளைத் தெரிவிக்கிறோம். தொடர்ந்து தேவன் எங்களுக்குக் கொடுத்த பீல் மக்கள் தரிசனப் பணியினை ஜெபித்துத் தாங்க அன்புடன் கேட்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- பேராயர் தேவதாஸ் அவர்கள் குடும்பம் மற்றும்**
**அனைத்து ஷாலோம் ஊழியர்கள்**

**30 வது ஆண்டு திருமண நாளைக் காணும்**
**பேராயர் தேவதாஸ் - சகோதரி வஹிதா தேவதாஸ் தம்பதியரை**

## வாழ்த்துகிறோம்



ஜூலை 8 ஆம் தேதி தங்களது இல்லறவாழ்வில் 29 வருடங்களை நிறைவு செய்து **30 வது ஆண்டிற்குள்** அடியெடுத்து வைக்கும் **பேராயர் தேவதாஸ் - சகோதரி வஹிதா தேவதாஸ்** தம்பதியரை ஷாலோம் ஊழியத்தின் சார்பில் அனைவருமாக இணைந்து உளமாற வாழ்த்தி மகிழ்கிறோம். கர்த்தர்தாமே இந்த ஆண்டு அவர்களுக்கு நல்ல சுகம் பெலன் தந்து, இல்லற வாழ்க்கையையும் சந்ததியையும் ஆசீர்வதித்து பீல் மக்கள் மத்தியில் தேவ சித்தத்தை நிறைவேற்ற அருள்புரிவாராக.